[13th March 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : Thirty-five are yet to be converted into Basic Training Schools.

SRI M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் இம்மாதிரியான பேஸிக் ட்ரெயினிங் காலேஜில் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே பாக்கியிருக்கின்ற 35 பாடசாலைகளையும் பேஸிக் ட்ரெயினிங் பாடசாலைகளாக மாற்றுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மொத்தம் ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் 133 இருக்கின்றன, அவைகளில் 98 பள்ளிகளை ஆதார பள்ளிக் கூடங்களாக மாற்றப்பட்டிருக்கிறது. முப்பத்தைந்து பள்ளிக்கூடங்கள் பாக்கியிருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த வருட திட்டத்தை சரியாகப் பார்த்தால் எல்லா பள்ளிகளையும் மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது தெரியவரும். 1958–59-ல் கூடுதலாக தீர்ந்து விடும், பாக்கியிருந்தால் 1959–60-ல் எல்லாமே முடிவு அடைந்து விடும் என்று நினைக்கிறேன்.

Scholarships

*** 16. *SNQ*.—DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for the delay in payment of scholarship money to students who were granted scholarships last year till February 1958 ?**

THE HON. SRI P. KAKKAN : The delay for the renewal of scholarships was mainly due to the late receipt of renewal applications by the Director of Harijan Welfare from the Headmasters and Principals of educational institutions.

DR. SRIMATHI SATHIYAVANIMUTHU : எத்தனையோ முறை மாணவர்கள் மனு செய்திருக்கிறார்கள். ஹரிஜன நல டயரக்டர் அவர்களும் சர்க்காரில் காலதாமதம் ஏற்படுவதாக சொல்லுகிறார்கள். இவ் விதம் காலதாமதம் ஆகிவருவதை என்னால் நிரூபிக்க முடியும். ஆகவே இந்த காலதாமதம் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நானும் உண்மையிலேயே காலேஜ்களுக்கும் பாடசாலைகளுக்கும் ரிமைண்டர் அனுப்பியிருப்பதை நிரூபிக்க முடியும். சமீபத்தில் 1–3–58-ல் ரிமைண்டர் அனுப்பப்பட்டது. 11–2–1958-ல் சில காலேஜ்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 20–2–1958-லும் 21–2–1958-லும் ரிமைண்டர்கள் காலேஜ்களுக்கும் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவைகளிலிருந்து பதில் கிடைக்காததினால்தான் காலதாமதம் ஏற்பட்டிருக்கும். இதை தவிர்க்க அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

SRI V. SANKARAN : பல பள்ளிக்கூடங்களிலுள்ள ஹாஸ்டல்கள் டிவைடிங் ஸிஸ்டத்தில் நடைபெற்று வருவதால் வருட இறுதி வரையில் உபகார சம்பளம் கொடுக்கப்படாமல் இருப்பதினால், இதற்காக மாணவர்களின் டெப்பாஸிட் தொகைகளை உபயோகப்படுத்தியும், அது போதாததால் மாணவர்களை வெளியேறுவதற்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், குறிப்பாக மதுரை காலேஜ், தமிழ்நாடு பாலிடெக்னிக் போன்ற கல்விச்சாலைகளில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாலும், மேலும் இது போன்ற தகவல்கள் தெரிவதாலும் பரீட்சை சமயத்தில் பரீட்சை கவலை போக உண்ண உணவு . . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் கையில் எழுதி வைத்துக்கொண்டு படிப்பதாக தெரிகிறது. அதை அனுமதிக்க முடியாது, தயவு செய்து கேள்வியை போடுங்கள்.

13th March 1958]

Sri V. SANKARAN : உண்ண உணவு, உறைய இடம் போன்ற இதர கவலைகளும் சேர்ந்து கொள்வதால் பரீட்சைக்கு தயார் செய்து கொள்ள முடிவதில்லை என்று அதிகமாக மாணவர்களிடமிருந்து முறையீடுகள் வந்து கொண்டிருப்பதால் இனிமேலாவது வருடத்தில் இரண்டு முறை, அதாவது முதல் இன்ஸ்டால்மெண்ட்டை முதல் டெர்ம்-க்குள்ளும் இரண்டாவது இன்ஸ்ட்டால்மெண்ட்டை பெப்ருவரி மாதத்திற்குள்ளும் உபகார சம்பளத்தை கொடுத்துவிட சர்க்கார் முன் வருவார்களா ?

The Hon. Sri P. KAKKAN : எவ்வளவு தூரம் மாணவர்களுடைய குறைகளை போக்க முடியுமோ அந்த அளவிற்கு போக்குவதற்கு ஏற்பாடு செய்து வருகிறது. எந்தெந்த பள்ளிக்கூடங்களில் தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

Dr. Srimathi SATHIYAVANIMUTHU : மருத்துவ கல்லூரி மாணவர்கள், பொறியியல் கல்லூரி மாணவர்கள் நீண்ட நாட்களாக, 7, 8, முறை மனு அனுப்பியிருந்தும் இதுவரையில், இப்போது மார்ச் மாதம் பிறந்தும், அவர்களுக்கு உபகார சம்பளம் கிடைக்கவில்லை என்று புகார்கள் சொல்லுகிறார்கள். அதனால் தான் நாங்களும் கேட்கிறோம். ஆகவே இதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் அப்படிப் பட்ட மாணவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு எனக்கு எழுதி அனுப்பினால் அதை கவனிக்கிறேன்.

Mr. SPEAKER : Questions are over. I would remind hon. Members not to shout, ' Sir, Sir. ' If they raise their hand, it is quite enough. I can see it.

II.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* MESSAGE FROM THE GOVERNOR.

Mr. SPEAKER : I have to announce that the Governor of Madras has given his recommendation in pursuance of Article 207, Clause (3) of the Constitution of India for the consideration in the Madras Legislative Assembly of the Madras Maternity Benefit (Amendment) Bill, 1958. 9-30 a.m.

III.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS CHILDREN (AMENDMENT) BILL, 1958.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg to move for leave to introduce the Madras Children (Amendment) Bill, 1958.

Mr. SPEAKER : The question is—

" That leave be granted to introduce the Madras Children (Amendment) Bill, 1958."

The motion was put and carried and leave was granted.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.